RBI/2005-06/07

DCM (Plg) No.G.7/10.01.00/2005-06 அகஸ்ட் 10, 2005

தலைவர்/நிர்வாக இயக்குநர்/
தலைமை நிர்வாக இயக்குநர்/அலுவர்
பொது/தனியார்/துறை/அயல்நாட்டு/வங்கிகள

அன்புடையீர்,

**கூடுதல் பாதுகாப்பு அம்சங்களுடன்**
**இந்திய ரூபாய் நோட்டுகள்**

2005, மே 7 தேதியிட்ட DCM(Plg)No.G.40/10.01.00/2004-05 எங்கள் கடிதத்தில் கூடுதலான/புதிய பாதுகாப்பு அம்சங்கள் ரூபாய் நோட்டுகளில் சேர்க்கவிருப்பது பற்றியும், மும்பையில் இது சம்பந்தமாக வங்கிகளின் தலைவர்கள்/நிர்வாக இயக்குநர்கள்/மூத்த அதிகாரிகளுடனான கூட்ட விவாதங்களையும் குறிப்பிட்டிருந்தோம்.

2. 2005 ஆகஸ்டில் கூடுதலான/புதிய பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட ரூ 50/100 நோட்டுகள் வெளியிடப்படும். இதையடுத்து செப்டெம்ப 2005 ல் 500/1000 நோட்டுக்கள் வெளியிடப்படும். 2006ல் ரூ 10/20 நோட்டுகளிலும் கூடுதலான/புதிய பாதுகாப்பு அம்சங்கள் சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

3. தேவையான நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டி, இத்துடன் ரூ 50/100 நோட்டுகளில் சேர்க்கவிருக்கும் கூடுதலான/ புதிய பாதுகாப்பு அம்சங்கள் பற்றிய பத்திரிகைச் செய்தியை இணைத்திருக்கிறோம். எங்களுடைய www.rbi.or.in என்ற இணைய தளத்திலும் இதனைக் காணலாம். உங்கள் பணினயாளர்களுக்கும் மக்களுக்கும் இநத்தகவல்கலைக் கொண்டு செல்லத் தேவையான விளம்பர வழிவகைகளை மேற்கொள்ளலாம். உங்கள் கிளைகளில் இதனை அறிவிப்பாகவும் வெளியிடலாம்.

நம்பிக்கையுள்ள

யு.எஸ். பாலிவால்
தலைமைப் பொது மேலாளர்